பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 10 2025 12 40
சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இளையோரின் நலனை கருத்தில் கொண்டு திறன் மேம்பாட்டுக்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையம், 12 அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் இன்று பாட்னாவில் ஆலோசனை மேற்கொண்டது.

3. ஆரோக்கியமான பெண்கள் – வலிமையான குடும்பம் இயக்கத்தின் கீழ் 6 கோடியே 50 லட்சம் மகளிருக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. அரபிக் கடலில் நிலைகொண்டுள்ள சக்தி புயல் நாளை மறுநாள் வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெறும் நிலையில் உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

இளையோரின் நலனை கருத்தில் கொண்டு திறன் மேம்பாட்டுக்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இளையோர் நலனுக்கான 62 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தினை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

அறிவுசார் வலிமையே நம்நாட்டின் பலம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

சர்வதேச அளவிலான எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் இளையோருக்கு திறன் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

சுயசார்பு இந்தியாவுக்கான பணிமனைகளாக தொழில் பயிற்சி மையங்கள் திகழ்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாரத் ரத்னா விருதுபெற்ற மறைந்த பீகார் முன்னாள் முதலமைச்சர் Karpoori Thakur பெயரில் திறன் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்படும் என்றும் பிரதமர் அறிவித்தார்.

>><><><><<

ஆரோக்கியமான பெண்கள் – வலிமையான குடும்பம் இயக்கத்தின் கீழ் 6 கோடியே 50 லட்சம் மகளிருக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இந்த இயக்கத்தினை பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 17 ஆம் தேதி தொடங்கி வைத்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

*நேற்று முன்தினம் வரை நடைபெற்ற இந்த இயக்கத்தின்கீழ், நாடுமுழுவதும் 18 லட்சத்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடைபெற்றதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*மகளிர் உடல்நலனை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த இயக்கம் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.*

*>><><><><<*

*சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயனடைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.*

*ஒடிசாவின் Jharsuguda-வில் ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*பொதுமக்கள் மட்டுமின்றி வணிகர்களும் இந்த வரிக்குறைப்பு மூலம் பயனடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.*

*மாணவர்கள் பயன்படுத்தும் ஸ்டேஷனரி பொருட்களுக்கான வரி ரத்து செய்யப்பட்டு இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*மத்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் காரணமாக நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வருவதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.*

*>><><><><<*

*பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ் குமார் தலைமையிலான குழு இன்று பாட்னாவில் அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனைகள் மேற்கொண்டது.*

*12 கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இதனைத் தொடர்ந்து இன்று பிற்பகல் காவல்துறை அதிகாரிகளுடனும் இக்குழுவினர் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.*

*நாளை மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் உயரதிகாரிகளுடன் தலைமைத் தேர்தல் ஆணையர் தலைமையிலான குழுவினர் ஆலோசனை நடத்தவுள்ளனர்.*

*இதில் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.*

*>><><><><<*

*பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்று மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்தியானந்த் ராய் கூறியுள்ளார்.*

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர், வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு தேசிய ஜனநாயக கூட்டணி செயல்பட்டு வருவதாக கூறினார்.

பீகாரின் வளர்ச்சிக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு 14 லட்சம் கோடி ரூபாயை வழங்கியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் நலனில் அக்கறையின்றி காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் செயல்படுவதாகவும் திரு நித்தியானந்த் ராய் குற்றம்சாட்டினார்.

>><><><<

கர்நாடகாவில் முதலமைச்சர் மாற்றப்பட உள்ளதாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு கே சி வேணுகோபால் கூறியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக கட்சித் தலைமை உரிய முடிவு மேற்கொள்ளும் என்றும் கூறினார்.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் திறன் காங்கிரசுக்கு உள்ளதாக திரு கே சி வேணுகோபால் தெரிவித்தார்.

>><><><<

நாட்டின் விடுதலைக்காக போராடிய கொடிகாத்த குமரனின் வீர நினைவுகள் நாட்டுக்கு முழு மனதுடன் சேவை செய்ய அனைவருக்கும் உத்வேகம் அளிக்கும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

கொடிகாத்த குமரன் என்று போற்றப்படும் திருப்பூர் குமரனின் பிறந்த தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நெசவுத் தொழில் நகரமான திருப்பூரில் பிறந்த அவரது நாட்டுப்பற்று போற்றுதலுக்குரியது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேபோல் நாட்டின் விடுதலைக்காக அயராது பாடுபட்ட சுப்பிரமணிய சிவாவின் பிறந்த தினமும் இன்று கொண்டாடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாரத மாதாவுக்கு கோயில் கட்டுவதற்காக தமிழகம் முழுவதும் பயணித்த அவர், நாட்டின் விடுதலைக்காக அயராது பாடுபட்டவர் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இதேபோல் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட சுப்பிரமணிய சிவா மற்றும் திருப்பூர் குமரனின் பிறந்த தினமான இன்று அவர்களின் தியாகங்களை நினைவுகூருவோம் என்று தெரிவித்துள்ளார்.

>><><><<

கரூர் உயிரிழப்பு சம்பவம் குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தின் கருத்துக்கள் மற்றும் வழிகாட்டுதல்களை தீவிரமாக கவனத்தில் கொண்டு தமது அரசு செயலாற்றி வருவதாக தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு புலனாய்வுக் குழு மூலம் இச்சம்பவத்தின் முழு உண்மையும் வெளிக்கொண்டு வரப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கூட்ட நெரிசல் காரணமாக ஏற்படும் விபத்துக்களை தடுக்கும் வகையில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நெறிமுறைகள் நாட்டிற்கே வழிகாட்டியாக இருக்கும் என்றும் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

>><><><<

உத்தரப்பிரதேசத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட Bareilly மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டு உள்ளது.

சமாஜ்வாதிக் கட்சிக் குழுவினர் இப்பகுதியை பார்வையிடவுள்ளதாக அறிவித்ததை அடுத்து கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் திரு Mata Prasad Pandey லக்னோ காவல்துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்கு அனுமதி அளிக்கப்படாத நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் தடுத்து நிறுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

ராஜஸ்தானில் மருந்துக் கட்டுப்பாட்டாளர் திரு ராஜாராம் ஷர்மாவை அம்மாநில அரசு பணிஇடைநீக்கம் செய்துள்ளது.

முதலமைச்சரின் இலவச மருந்து திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்பட்ட இருமல் மருந்தை குடித்ததில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்ததை அடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த இருமல் மருந்தை விநியோகம் செய்த நிறுவனத்தின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சம்பந்தப்பட்ட நிறுவனம் விநியோகம் செய்த இதர 19 மருந்துகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>><><><<

மணிப்பூரில் கடந்த சில நாட்களாக பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 10 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டு இருப்பதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

>><><><><<

அரபிக் கடலில் நிலைகொண்டுள்ள Shakti புயல் தொடர்ந்து வலுவடைந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

குஜராத் மாநிலம் போர்பந்தருக்கு மேற்கே 480 கிலோமீட்டர் தொலைவில் நிலைகொண்டுள்ள இந்த புயல், அதிதீவிர புயலாக நாளை வலுவடையக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது மேற்கு தென்மேற்காக நகரக்கூடும் என்றும் பின்னர் நாளை மறுநாள் கிழக்கு வடகிழக்கில் இந்த புயல் நகர்ந்து படிப்படியாக வலுவிழக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, பீகார் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மூன்றாவது நாளான இன்று வெஸ்ட் இண்டீஸ் இரண்டாவது இன்னிங்ஸில், சற்றுமுன்வரை 5 விக்கெட் இழப்புக்கு 90 ரன் எடுத்துள்ளது.

ஜடேஜா அபாரமாக பந்துவீசி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

முன்னதாக, இந்தியா முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 448 ரன் எடுத்திருந்த நிலையில், ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

வெஸ்ட் இண்டீஸ் முதல் இன்னிங்சில் 162 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

------------

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-13, 19-21, 21-8 என்ற செட்கணக்கில் பின்லாந்தின் Kalle Koljonen-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Tasnim Mir-ம், ஆடவர் இரட்டையர் பிரிவில் அர்ஜுன் - ஹரிஹரன் இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

>> End of News <<